2016 ஜனவரி 21]
13—

விளையாட்டரங்கம்

***29795—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டரங்கம், ஓடுதளம் மற்றும் விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் செயல்பட்டு வரும் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு உள் விளையாட்டரங்கம், ஓடுதளம் மற்றும் விளையாட்டரங்கம் அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு மைதானம் கிட்டத்தட்ட 12 ஏக்கரில் இருந்து வருகிறது. அது பழமையான பள்ளி. அந்தப் பள்ளிக்கு உள் விளையாட்டு அரங்கம் மற்றும் ஓடுதளம் கட்டித்தர வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அதை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு உள் விளையாட்டரங்கம், ஓடுதளம் மற்றும் விளையாட்டரங்கம் அமைக்கக் கோருவதால், நிதிநிலைமைக்கேற்ப அவரது கோரிக்கைகள் ஒன்றன்பின் ஒன்றாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி துறையின் சார்பிலே, ஒன்றியத்திலுள்ள பள்ளிகளுக்கு விளையாட்டரங்கம் கட்டுவதற்காக அரசு நிதி ஒதுக்கியது. அந்த நிதியின்மூலம், உசிலம்பட்டி ஒன்றியத்தில் சரியாக விளையாட்டரங்கம் கட்டித்தரவும் இல்லை. அதற்கான நிதி ஒதுக்கப்பட்டும், செலவுகள் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, உசிலம்பட்டி நகருக்கு அதை மாற்றிக் கொடுத்தால்கூட மிகவும் வசதியாக இருக்கும். மேலும், எழுமலை ஆண்கள் பள்ளி, சாப்டூர் பள்ளி, சேடப்பட்டி பள்ளி, எம். கல்லுப்பட்டி பள்ளியில் விளையாட்டரங்கங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு காம்பவுன்ட் சுவர்கள் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த வட்டார விளையாட்டு அரங்கத்தினை இன்னும் நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்ற காரணத்தினால், அதனை உசிலம்பட்டிக்கே மாற்றியமைப்பதற்கு கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். என்ன காரணத்திற்காக அங்கே அந்தப் பணி இன்னும்*

2016 ஜனவரி 21]

தொடங்கவில்லை என்பதை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் அந்த இடத்திலே விளையாட்டு மைதானத்தைத் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்றால், அதை மாற்றிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு கோரிக்கைகளை நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அவை குறித்தும் நீங்கள் எழுதிக் கொடுத்தால், அவற்றைப் பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

14—

அரிய வகை மரங்களைப் பாதுகாத்தல்

***15287—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலைப் பகுதியிலுள்ள அரிய வகை மரங்களைப் பாதுகாத்து, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் சட்டமன்றத் தொகுதி, அழகர்கோவில் பகுதியில் உள்ள காடுகள் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும். மேலும், அப்பகுதிகளில் அரிய வகை மரங்கள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் ஆகியவை நல்ல முறையில் வனத் துறையால் பாதுகாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.